# அருட்தந்தை துப்புயி அடிகளாரின் ஆதிச் சுவடியும் அற இலக்கியமும்

***முனைவர் அ. ஜான்போஸ்கோ,*** **M.A., M.Phil., M.A., SET., Ph.D.**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
கடலூர், தமிழ்நாடு, இந்தியா

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6399

***முன்னுரை***

*தமிழ் இலக்கிய வரலாறு பல்வேறு காலங்களில் வாழ்ந்த பலதரப்பட்ட அறிஞர்கள் பெருமக்களால் படைக்கப்பட்டு வெளி வந்துள்ளது. கால அடிப்படையிலும் இலக்கிய வகையிலும் இலக்கிய வரலாற்று நூல்கள் படைக்கப்பட்டு வந்து கொண்டு இருக்கின்றன தமிழகத்தில் வாழ்ந்த பல்வேறு சமய பெருமக்கள் அவரவர்கள் தங்களின் சமய கருத்துக்களையும் கொள்கைகளையும் தமிழ் மொழியின் வாயிலாக வெளிப்படுத்தி வந்திருக்கின்றனர் தமிழ் மொழியும் பல துறைகளில் இலக்கிய வளர்ச்சி பெற்று சிறந்து விளங்கி கொண்டிருக்கின்றது பிற சமயங்களைப் போலவே கிறிஸ்தவர்களும் தமிழ் இலக்கியங்களை படைத்துள்ளனர். வாணிபத்திற்காக தமிழகத்தில் நுழைந்த பிற நாட்டவர்களுள் ஆங்கிலேயர்களும் அடங்குவர். அப்படி வந்த ஆங்கிலேயர்கள் தங்களின் கிறிஸ்தவ மதத்தையும் பரப்ப முற்பட்டார்கள் ஆகையால் கிறிஸ்தவ மதத்தை பரப்ப வந்த பாதிரிமார்கள் தங்களை தமிழ் மக்களிடம் கொண்டு செல்ல மொழி ஒரு தடையாக இருந்தமையால் முதலில் தமிழ் மொழியை நன்கு கற்று தேர்ந்தார்கள். அதைத் தொடர்ந்து மதத்தை விட தமிழ் மொழியை வளர்த்தெடுப்பதில் தங்களின் ஆர்வத்தை காட்டினார்கள் எனவே தமிழ் மொழியின் சிறப்பினையும் அதன் பன்முகத் தன்மையினையும் உலகிற்கு அறிவிக்க தொடங்கினார்கள் அப்படி மதங்களை பரப்ப வந்து தமிழ் மொழியைக் கற்றுத் தேர்ந்து விளங்கிய பாரிஸ் நகரைச் சேர்ந்த வேத போதக சபை குருக்களில் ஒருவர்தான் அருட்பணி லூயிஸ் சவினியன் துப்புயி அடிகள் ஆவார். இவர் பிப்ரவரி 2 1832 இல் புதுச்சேரி வந்தடைந்தார் 1841 மிஷின் பிரஸ் என்ற அச்சகத்தை நிறுவி அதன் மேலாளராக இருந்து கொண்டு பல நூல்களை தமிழில் எழுதவும் மொழிபெயர்க்கவும் பதிப்பிக்கவும் செய்தார் . அப்படி தமிழில் உள்ள பல அற இலக்கியங்களை படித்து அவற்றை நிறைவு செய்யும் வகையில் தான் வடிவமைத்த ஆதிச் சுவடி என்ற நூலில் ஒழுக்கமாலை என்னும் 12 கவிதைகளில் இறை வார்த்தையின் அடிப்படையில் அனைவருக்கும் அவசியமான சிறந்த ஒழுக்க நெறிகளை தொகுத்தார் இந்த ஒழுக்க நெறிகளை பிற இலக்கியங்களோடு தொடர்புபடுத்தி ஆய்வு நோக்கில் இந்த கட்டுரையானது "அருட்தந்தை துப்புயி அடிகளாரின் ஆதிச் சுவடியும் அற இலக்கியமும்" என்னும் தலைப்பில்உருவாக்கப்பட உள்ளது*

### ஆய்வுக் கருதுகோள்

ஒழுக்க மாலை என்னும் 12 கவிதைகளில் இறை வார்த்தைகள்

- தருமம் எங்கினும் தலைதனை காக்கும்
- பொருள் இல்லார்க்கு இல்லை புதல வாழ்க்கை
- இல்லறம் என்பது நல்லறம் ஆகும்
- கற்பு நிலைமை பொற்'பு ஒளி மலையே
- தவம் எனப்படுவது தகு கதிக் கேணி
- கல்வி என்பது செல்வ முதன்மை
- பொறுமை உடைமை புண்ணியம் உடைமை
- சகவாசம் நன்மை சகல முதன்மை
- நன்றி அளவு ஞாலத்தின் பெரிது
- தீங்கு செய்யாமை செய் பெரு நன்மை
- ஈகை என்பது மாகன தருமம்
- தெய்வ ஊழியம் செய்வது கடமை

இவற்றை ஆய்வு கருதுகோலாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது

### ஆய்வுப் பயன்

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்ற கூற்றிற்கு இணங்க பள்ளி பருவத்தில் கற்றுக் கொடுக்கின்ற ஒழுக்கங்கள் அவர்கள் அமைக்கப் போகின்ற குடும்ப உறவுக்கும் வாழப் போகும் சமூக வாழ்வுக்கும் அவசியம் என்பதை அறிந்து பள்ளிகளில் ஒழுக்கமாலை என்னும் 12 கவிதைகள் வழியாக 12 ஒழுக்கங்களை பள்ளிகளில் உள்ள எல்லா வகுப்புகளுக்கும் கற்றுக் கொடுத்தல் நல்ல பயன் அளிக்கும் என்ற உயரிய நோக்கத்தில் இந்தக் கட்டுரையானது படைக்கப்பட்டுள்ளது

### தருமம் எங்கினும் தலைதனைக் காக்கும்

**"தருமம் எங்கினும் தலைதனைக் காக்கும
தருமம் கைவிடல் தவறினுள் ஆக்கும்
மனம் எனும் குரங்கை வசம் செய்யும் தருமம்
தனம் பல பாசத்தளை படா தருமம்
முயற்சி அனைத்தினும் முன் செல்லும் தருமம்
அயர்விலா முடிவுக்கு ஆஸ்தியாம் தருமம்
பிறரையும் போல் பேணுவது அதுவே
சிறை நரகு இருள் அறச் செய்வதும் அதுவே" ஆதிச் சுவடி**

என்பது துப்புயி அடிகளின் ஒழுக்கமாலை கவிதையாகும் இதை தர்மம் என்றால் என்ன என்பதற்கு விளக்கம் காணும் போது தருமம் என்பது அவரவர்களின் கடமை என்றே கூறலாம். ஆனால் தருமம் என்பது யாரும் கேட்காமல் அவருக்குத் தெரியாமல் செய்யக்கூடிய நன்மையாகும் இதுவே புண்ணிய கணக்கில் சேரும். பசியால் வாடும் ஒருவர் தன் பசியைக் கூறி கேட்டால் அது தானம் அதுவே அவன் பசி அறிந்து அவன் கேட்காமல் அவனுக்கு உணவு அல்லது உதவி செய்வது தருமம் ஆகும். பிறரையும் தன் போல் பேணுவது தருமம் சிறை நரகில் அரச் செய்வதும் அதுவே என்ற வரிகளில் கடைசியாக காட்டப்பட்டிருக்கும் வரிகளைச் சொல்லி இந்த கருத்தானது ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகிய மணிமேகலை என்ற நூலில் சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக ஆக்கிய காதையில் இடம் பெற்றுள்ளது. இந்த சிறை கோட்டம் அறக்கோட்டமாக வேண்டும் என்பதை அரைக் கூவல் விடுத்த மணிமேகலையின் செயல் இங்கு காட்டப்பட்டுள்ளது. இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்தல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு என்கிறார் நச்செள்ளையார்

**"வாராக் ஆயினும் இரவலர் வேண்டித்
தேரில் தந்து அவர்க்கு ஆர்பதன்
கல்கும் நகைச்சால் வாய்மொழி
இசைசால் தோன்றல்"**

**பதிற்றுப்பத்து**

தருமம் என்பது எத்தகையது என்பதை காண முடிகிறது.

### பொருள் இல்லார்க்கு இல்லை புதல வாழ்க்கை

**பொருள் இல்லார்க்கு இல்லை புதல வாழ்க்கை
பொருளினை படைக்கில் பெருமிதம் நோக்கேல்
அர்த்தமில்லாத வாழ்வு அழிவைத் தரும்
அர்த்தமுள்ள வாழ்வு எப்பொழுதும் வீண் பெருமை அடையும்
ஆதிச் சுவடி**

அர்த்தமுள்ள வாழ்வு எப்பொழுதும் தொலைநோக்குப் பார்வை கொண்டு இருக்கும் இதற்கு ஆதாரமாக தாவீது அரசரின் வாழ்க்கையை திருவிவிலியத்தில் காட்டப்பட்டுள்ளது இதே கருத்தை திருவள்ளுவர் தம் குறளில்

**அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள்**
**இல்லார்க்கு இவ்வுலகம் இலாகியாங்கு**

**குறள் 247**

இந்த குறளில் பொருள் இல்லை என்றால் இந்த இல்லற வாழ்வில் வாழ்வது மிக மிக கடினம் அதுபோல இல்லற வாழ்வின் அடுத்த படியான சொர்கத்தில் வாழ வேண்டுமானால் (வீடு பேறு) அடைய வேண்டுமானால் அருள் இல்லை என்றால் அவ்வுலகம் இல்லை என்பது குறிப்பிடப்படுகிறது

## இல்லறம் என்பது நல்லறம் ஆகும்

**"இல்லறம் என்பது நல்லறமாகும**
**"இல்லற வாழ்க்கை இருவர் நற்செயற்கை"**

**ஆதிச் சுவடி**

என்ற வரிகள் இல்லறமே அனைத்து நல்ல குணங்களின் பிறப்பிடமும் தொடக்கமும் ஆகும். இல்லறம் என்னும் வார்த்தைக்கு ஆண் பெண் இருவர் இணைந்து இல்லறம் என்னும் குடும்பம் அமைக்கின்றார்கள் அக்குடும்பமே அனைத்து நற்பண்புகளையும் வளர்த்தெடுக்கும் இடமாக அமைகிறது அந்த இல்லற வாழ்க்கையே நல்ல அற வாழ்க்கை என்று குறிப்பிடுகின்றார் தந்தை அவர்கள்.

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்**
**புறத்தாற்றின்**
**போஒய் பெருவ எவன்**

**குறள் 46**

ஒருவன் அறநெறியில் இல்வாழ்க்கை செலுத்தி வாழ்வானானால் அத்தகையவன் வேறு நெறியில் சென்று பெறக்கூடியது ஒன்றுமில்லை. என்று வள்ளுவர் தம் குறளில் கூறியுள்ளார் .

**"கணவனும் மனைவியும் கருத்து ஒத்து இருந்து**
**மணிமுறை தரும வழி செயல் இல்லறம்"**

**ஆதிச் சுவடி**

என்பது இருவர் சேர்ந்து செய்யும் நற்செயல் அதாவது கணவனும் மனைவியும் கருத்துக்களால் ஒன்று சேர்ந்து அன்பை பரிமாறிக் கொண்டு வாழும் வாழ்க்கையே வீட்டில் நடத்துகின்ற இல்லற வாழ்க்கைக்கு அற வாழ்க்கையாகும் என்கிறார் தந்தை அவர்கள். இந்த கருத்தை

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது**

**குறல் 45**

இல்வாழ்க்கை என்பது பண்பு உடையதாகவும் பயனுடையதாகவும் விளங்குவதற்கு அன்பான உள்ளமும் அதை ஒட்டிய நல்ல செயல்களும் தேவை என்கிறார் இந்த குறளில் வள்ளுவர்.

## கல்வி என்பது செல்வ முதன்மை

**"கல்வி என்பது செல்வ முதன்மை**
**கல்வி இன்மை கண்ணிரண்டு இன்மை"**

**ஆதிச் சுவடி**

என்ற வரிகள் ஒருவன் எவ்வளவு வளமையான செல்வம் உடையவனாக இருந்தாலும் அவனுக்கு கல்விச் செல்வம் இல்லை என்றால் மற்றச் செல்வம் இருந்தாலும் அதனால் அவனுக்கு ஒரு பயனும் இல்லை அதே போல் ஒருவனுக்கு கல்வி அறிவு இல்லை என்றால் அவன் கண் இரண்டும் இருந்தும் அதனால் ஒரு பயனும் இல்லை என்கிறார் தந்தை அவர்கள். இதே கருத்தை வள்ளுவர்

**"கண்ணுடையார் என்பவர் கற்றோர்**
**முகத்திரண்டு**
**புன்னுடையார் கல்லாதவர்"**

**குறல் 393**

இந்த குறளில் கண்ணுடையவர் என்பவர் கற்றோர் மட்டுமே அப்படி கல்வி அறிவில்லாத வரை முகத்தில் கண் இருந்தாலும் அவை புண் என்று கூறுகிறார் வள்ளுவர்.

**"குஞ்சு அழகும் கொடுத்தானே கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து நல்ல யாம்
என்னும் நடுவு நிலைமையால் கல்வி
அழகே அழகு"**

**நாலடியார்**

ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் தலைமுடி ஆடை இரண்டும் அழகு தரக்கூடியவை மஞ்சள் பெண்ணுக்கு அழகு தரக்கூடியவை இவை அனைத்தும் அழகல்ல கல்வியால் வரும் அழகே அழகு என்று நாலடியார் கல்வி அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளதை தொடர்புபடுத்தி காட்டப்பட்டுள்ளது

**"அழியா செல்வம் ஆவது கல்வி
ஒழியா கசட்டை ஒழிப்பது கல்வி
சிறியோரை பெரியோர் ஆகும் கல்வி
நெறியில் உலகை நிறுத்தும் கல்வி"**

**ஆதிச் சுவடி**

என்பது அழியாத செல்வம் அப்படிப்பட்ட கல்வியானது அழிக்க முடியாத கரையையும் (கசடு) சந்தேகம் போன்றவற்றை அழிப்பது கல்வி என்று கூறுகிறார் இதையே வள்ளுவர்

**கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக**

**குறல் 391**

என்று கூறுகிறார். சிறியோராக இருப்பவரையும் கல்வியறிவு இருந்தால் அவரை பெரிய மனிதர் ஆக்குகிறது கல்வி இதே கருத்தை சங்க இலக்கியத்தில் கல்வியின் சிறப்பை கூறும் ஆரியப் படை கடந்த பாண்டிய மன்னன் கீழ்ப்பால் ஒருவன் கற்கின் மேற்பால் ஒருவன் அவன் கண் படுமே புறநானூறு 183

என்ற பாடலின் மூலம் கல்வியின் சிறப்பை படம் பிடித்து காட்டியுள்ளார்

**"பொறுமை உடைமை புண்ணியம் உடைமை
பொறுமையே என்றும் போற்றுதல் கடமை"**

**ஆதிச் சுவடி**

ஆம் பொறுமை வாழ்வுக்கு வழிகாட்டும் பேருண்மை ஆகும் மகிழ்ச்சிக்கு அழைத்துச் செல்லும் மறையுண்மை பொறுமை நிறைவை நோக்கி நடந்திடும் நிறையு உண்மை வித்தகைய வாழ்வுக்கு வழிகாட்டும் நல்வழியை நாமும் தொடர்ந்து இருந்தால் நமது வாழ்வு சிறப்படையும் என்கிறார்

**"கடலினும் பெரிது கணம் உள பெருமை
தொடர் பகை அனைத்தும் செய்திடும்
பொறுமை"**

இந்த வரிகள் தாவீதின் உடல் தோற்றத்தைக் கண்டு கோலியாத்து கேலி செய்த போது தாவீது அரசர் எந்த ஒரு சலனமும் இன்றி பொறுமை காத்து ஒரு சிறிய கூழாங்கல்லினால் கோலியாத்தை வென்றார் அவரது பொறுமை அவரை மிகப் பெரிய அரசர் ஆக்கியது மேலும் அவரது பொறுமையால் தனக்கு எதிராக வந்த அனைத்து பகைவர்களையும் வென்றார் பொறுமையுள்ளோர் தக்க காலம் வரை அமைதி காப்பர் பின்னர் மகிழ்ச்சி அவர்களுள் ஊற்றெடுத்துப்பாயும் என்ற வரிகள் பொறுமையின் மறு உருவத்தை எடுத்துக்காட்டுகின்றது.

**சகவாசம் நன்மை சகல முதன்மை**

நண்பனுக்காக உயிரைக் கொடுப்ப தான் உயர்ந்த அன்பு அதுவே பேரன்பு என்ற பொன்மொழிக்கு ஏற்ப இறைமகன் இயேசு வாழ்ந்து வந்தார் நட்பு என்னும் குண நலன் வாழ்வின் இன்றியமையாத உறவு வாழ்வை வளம் பெறச் செய்யும் உன்னத உறவு வாழ்வுக்கு அழகு ஊட்டும் ஓர் உயர்ந்த உறவு இத்தகைய நட்பு உறவை தந்தை அவர்கள் தம் கவிதையில் எப்படி கூறியுள்ளார் என்றால்

**"சகவாசம் நன்மை சகல முதன்மை
சகவாச தோற்றம் சகலமும் தோஷம்
கூடு நட்பை கொடுத்துக் கொள்ளு
கூடா நட்பை கொள்ளாது தள்ளு
நல்லோர் போல்லார் நல்லார் அல்லர்
நல்லோர் போல்லார் நாளே சொல்லும்
தெளோ பாம்போ செம்புலியோ என
நாளோடு அறிந்து நல் உறவாடு"**

**ஆதிச் சுவடி**

இந்த பொன்மொழிகள் நட்பின் இலக்கணத்தை விளக்குகின்றது இதே கருத்தை வள்ளுவரும் தனது குரலில் எப்படிப்பட்ட நட்பை கொள்ள வேண்டும் எப்படிப்பட்ட நட்பை தள்ள வேண்டும் என நட்பு. கூடா நட்பு பழைமை போன்ற அதிகாரங்களின் மூலம் விளக்கியுள்ளார்

**"தீங்கு செய்யாமை செய் பெரு நன்மை**
**தீங்கு செய்வோரைச் சூழ்ந்திடும் தின்மை"**

**ஆதிச் சுவடி**

என்ற வரிகளின் மூலம் பிறருக்கு தீங்கு செய்ய நினைத்தால் அது தன்னையே தாக்கும் பிறருக்காக நாம் தோண்டும் பள்ளம் நாமே விழும் நிலை ஏற்படுகின்றது என்பதை

**"பிறருக்கு இடு தீங்கு தனக்கே தாங்கும்**
**பிறருக்கு இடு பள்ளம் தான் விழும் பள்ளம்"**

**ஆதிச் சுவடி**

என்ற வரிகள் நாம் ஒருவருக்கு நன்மை செய்தால் அவர் நமக்கு தீங்கு நினைத்தாலும் அது நன்மையிலேயே சென்று முடியும் நமக்கு என்கிறார்

**"திண்மை செய்வதற்கும் நன்மை செய் என்று**
**திண்மையை கேட்க தெய்வம் உண்டு**
**மறந்தும் பிறருக்கு ஒரு கேடு எண்ணாதே**
**இறந்திட படினும் இடர் பண்ணாதே"**

**ஆதிச் சுவடி**

என்ற வரிகள் நம் வாழ்வை நன்மையால் நிரப்பினால் தீமையானது நம்மை விட்டு விலகி ஓடும் என்கிறார் தந்தை அவர்கள்

### ஈகை என்பது மாகன தருமம்

**"ஈகை என்பது மாகன தருமம் என்றும்**
**ஈகை உள்ளோருக்கு இருநிதி பெருகும்"**

**ஆதிச் சுவடி**

இந்த வரிகளுக்கு வள்ளுவர் தன் குறளில் விளக்குகிறார்

**வரியாக்கு ஒன்று ஈவதேஈகை மற்று எல்லாம்**
**குறியேதிர்ப்பை நீர துடைத்து**

**குறள் 221**

என்ற குரலில் வள்ளுவர் ஒருவர் தனக்கு செய்த உதவிக்கு பதில் உதவி கூட செய்ய முடியாத ஏழைகளுக்கு கொடுப்பதே ஈகை ஆகும். பிற கொடைகள் யாவும் பயன் எதிர்பார்த்து கொடுக்கும் தன்மையை உடையது.

**"பிறர் அறியாமல் பொருள் தரல் ஈகை**
**தரினும் மனதில் சலியாதது ஈகை**
**செல்வ பயிருக்கு சொறி நீர் ஈகை**
**நல்லற புகழை நாட்டுவது ஈகை"**

**ஆதிச் சுவடி**

என்று ஈகையின் தன்மையை துல்லியமாகக் குறிப்பிடுகிறார்

### தெய்வ ஊழியம் செய்வது கடமை

**"கடமை தெய்வ ஊழியம் செய்வது கடமை**
**மெய்மறை தெளி நடை முறைமையும் கடமை**
**தேவ ஆலயத்தை தொழுவது கடமை**
**கோவில் குருமொழி கொள்வது கடமை**
**மாதா பிதா உயிரை போற்றுதல் கடமை**
**பிதா மாதாவை பேணுதல் கடமை**
**பெரியார் துணையைப் பெருகுதல் கடமை**
**தரும நன்னெறி எல்லாம் தவறாமை கடமை"**

**ஆதிச் சுவடி**

கடமை என்பதன் சிறப்பு மற்றும் அதன் உன்னத நிலையை எடுத்துரைக்கும் அருட்தந்தை அவர்கள் கடமை தவறாத வாழ்வதே வாழ்க்கை என்று மேற்கண்ட கவிதைகள் மூலம் எடுத்துரைக்கிறார்

### முடிவுரை

தமிழில் நீதி நூல்கள் எழுதிய பிரான்ஸ் நாட்டு முன்மொழி கவிஞர் அருட்தந்தை லூயிஸ் சவினியன் துப்புயி அடிகளார் தான் துவங்கிய பள்ளிகளில் நல்லொழுக்க பாடங்களை கற்றுத்தர ஆதிச்சுவடி என்னும் அற நூலையும் தான் ஏற்படுத்திய துறவற சபையின் சகோதரிகள் துறவற புண்ணியங்களில் வளர துறவர உத் தியானம் என்னும் அறநூலையும் தானே படைத்தார் நல்ல குடும்பங்களை அமைத்து நல்ல உறவுகளை கற்றுக் கொள்ளவும் நல்ல ஒழுக்கமுள்ள சமூகத்தை உருவாக்கவும்

இல்லற உத்தியானம் என்ற நூலையும் எழுதினார் நல்ல பழக்கவழக்கங்கள் உருவாவது குடும்பத்தில் தான் அவற்றை அறிவார்ந்த முறையில் வளர்ப்பது பள்ளிகளில் தான் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்ற கூற்றிற்கு இணங்க பள்ளி பருவத்தில் கற்றுக் கொடுக்கின்ற ஒழுக்கங்கள் அவர்கள் அமைக்கப் போகின்ற குடும்ப உறவுக்கும் வாழப் போகும் சமூக வாழ்வுக்கும் அவசியம் என்பதை அறிந்து பள்ளிகளில் ஒழுக்கமாலை என்னும் 12 கவிதைகள் வழியாக 12 ஒழுக்கங்களை பள்ளிகளில் உள்ள எல்லா வகுப்புகளுக்கும் கற்றுக் கொடுத்தல் நல்லது என்ற உயரிய நோக்கத்தில் எழுதப்பட்ட இந்த ஒழுக்க மாலையை சங்க இலக்கிய நூல்களோடு தொடர்புபடுத்தி இந்த கட்டுரையானது படைக்கப்பட்டுள்ளது இதில் ஆராயப்பட்ட அற நூல்களோடு ஆதிச்சுவடி என்ற ஒழுக்கமாலை அனைத்து பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பதே அருட்தந்தை லூயிஸ் சவினியன் துப்புயி அடிகளின் உயரிய நோக்கமாக இக்கட்டுரையானது உருவாக்கப்பட்டுள்ளது.